## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 61/2023

பெயர் – பொன்னுத்தாய்(வா.சா.1)

நாள் – 03.09.2025

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1) எனது தாயார் பெயர் சின்னநாரணம்மாள் என்றால் சரிதான். எனக்கு படிப்பறிவு கிடையாது. பள்ளி பக்கம் சென்றது கிடையாது. எனது கணவர் பெயர் ஆழ்வார்சாமி என்றால் சரிதான். எனது கணவருடைய தகப்பனார் பெயர் ரெங்கப்பநாயக்கர் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது காடு எனக்கு வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். மேற்படி காடானது யாரிடமிருந்து வேண்டும் என்று கேட்கிறேன் என்றால் நத்தத்துபட்டிகாரனிடம் கேட்கிறேன். அவர் பெயர் என்வென்று எனக்கு தெரியாது.

2) வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கான விபரத்தை எனது வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் எனது மகன் சொன்னார். வழக்கில் எத்தனை சொத்துக்கள் காண்பித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, எனது மகனுக்கு தான் தெரியும். எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லாமல் எனது மகன் சொன்னதன் பேரில் இயற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) இந்த வழக்குரையில் நிவாரணமாக சர்வே எண்.381 என குறிப்பிட்டுள்ள சொத்தை ஒப்படைக்க வேண்டி கேட்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கும், சின்னகெங்கம்மாளுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சின்னகெங்கம்மாளின் கணவர் பெயர் நாராயணசாமி நாயக்கர் ஆகும். வா.சா.ஆ.10 ஆவணம் மூலமாக நானும், சின்னகெங்கம்மாளும் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு 14.06.2000ம் தேதி அன்று தகுந்த பிரதிபியோஜனத்தின் பேரில் கிரையம் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

4) மேற்படி வா.சா.ஆ.10 ஆவணத்தில் எனது கணவர் ஆழ்வார்சாமிநாயக்கர், நானும், சின்னகெங்கம்மாள் அவர்களும் கிரையதாரர்களாக இருந்து கிரையம் கொடுத்தோம் என்று நிரூபித்து எனது கணவர் ஆழ்வார்சாமி சாட்சி கையொப்பம் போட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேலும் வா.சா.ஆ.10 கிரையம் எழுதிக் கொடுத்ததாக அதை ஒப்புக் கொண்டு நானும், சின்னகெங்கம்மாளும் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆனது 02.01.2018 ம் தேதி நகல் எடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

5) வில்லங்க சான்றிதழ் எடுத்தது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1, 4 மற்றும் 7 ஆன வழக்கறிஞர் அறிவிப்பானது நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், சின்னகெங்கம்மாளும் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு 14.06.2000ம் தேதி அன்று தகுந்த பிரதிபியோஜனத்தின் பேரில் கிரையம் கொடுத்தோம் என்றும், அதன் பேரில் 2ம் பிரதிவாதி அனுபவம் செய்து வந்து 11.11.2013ம் தேதி 2ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு தகுந்த பிரதிபியோஜனத்தின் பேரில் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அவ்வாறு கிரையம் பெற்ற 3ம் பிரதிவாதி தற்போது வரை வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருகிறார்.

6) எனவே வழக்கு சொத்தை பொறுத்து எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் எனக்கு இல்லாததால் வழக்குரையில் கேட்டுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆனது 09.03.2023 தேதியில் எடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் வழக்குரையில் 03.01.2018ம் தேதி எடுத்து பார்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது, எனவே வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தது வழக்கிற்கான வழக்குமூலமாக ஆகாது என்றால் சரியல்ல.

7) வழக்கு சொத்தை குறித்து பிரதிவாதிகளை நான் சந்தித்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.10 கிரைய ஆவணத்தில் 1ம் பிரதிவாதி கையொப்பம்

செய்யவில்லை, எனவே இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சின்னகெங்கம்மாளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர் இறந்துவிட்டார். அவ்வாறு சின்னகெங்கம்மாள் இறந்துவிட்டார் என்பதால் அவரை வழக்கில் சேர்க்கவில்லை என்று வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

8) எனவே சின்னகெங்கம்மாளின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளேன், அவர் தான் 1–ம் பிரதிவாதி சோலைச்சாமி ஆவார். நானும் சின்னகெங்கம்மாளும் வழக்கு சொத்தை ஏற்கனவே கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் தபசில் சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், மேற்படி சங்கதிகள் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் அதனை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9) எனக்கு தெரியாமல் வழக்கு சொத்தை மோசடியாக கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்று எனது வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. 2000 ஆம் ஆண்டே கிரையம் கொடுத்துவிட்டதால் தான் 23 ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை, அதனால் இவ்வழக்கு காலாவதி தோஷத்தினால் பாதிப்படைகிறது என்றால் சரியல்ல. எனது சாட்சியம் சாட்சிய சட்டத்தின் படி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

10) வழக்கானது உரிய சட்டபடி மதிப்பீடு செய்யப்பட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு வனையப்பட்ட விதமே தவறு என்றும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**<u>4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) 4 ம் பிரதிவாதி சார்பதிவாளர் பத்திர பதிவு சட்டத்தின் படி முறையான முத்திரை கட்டணம் பெற்று ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்து கிரையம் பெற்றது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நிவாரணம் கோரி அதற்குரிய நீதிமன்றம் கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

2) மேற்படி வழக்கில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட பதிவாளர் அவர்களை கட்சிகாரர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனவே தாவா

வழக்கானது அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தினால் பாதிப்படைந்து தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. எனவே 4ம் பிரதிவாதியை பொறுத்து இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.